தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1979 ஏப்ரல் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ) ''இந்து'' பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், இன்றைய இந்து பத்திரிக்கையில் 9 இடங்களுக்கு தமிழக சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடைபெறும் என்று திரு. ஜி. கே. ரெட்டி அவர்கள் எழுதி இருக்கிறார்கள், எங்களுக்கு பயமாகப் இருக்கிறது. அப்படி ஏதாவது உண்டா ? அப்படி இருந்தால், எந்தெந்த இடங்களுக்கு என்று அறிவிக்க முடியுமா ? இந்து பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. இன்று பார்த்தேன். அதுபற்றி அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒன்று, கேள்வி நேரத்தின் போது ஒழுங்குப் பிரச்னை எழுப்பக்கூடாது. இரண்டு, எல்லோரும் நல்லபடியாகத்தான் உயிரோடு இருக்கிறோம். அந்த மாதிரி சந்தர்ப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த மாதிரி சந்தர்ப்பம் வேண்டாம்.

திரு. மு. அம்பிகாபதி : இரண்டு நிமிடம் இன்று உதவி சபாநாயகர் தாமதமாக வந்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரியாகத்தான் வந்து இருக்கிறேன். இங்குள்ள கெடிகாரம் பாஸ்டாகப் போகிறது.

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : அவர்தான் பேரவையின் நிகழ்ச்சிகளை இரண்டு நிமிடம் லேட் செய்து விட்டார்.